# நீ மறுபடியும் பிறந்திருக்கிறாயா?

## (மோட்சவாசியா? நரகவாசியா?)

## (Are you born again?)



டாக்டர். டேவிட் இளங்கோவன்

# சீர்திருத்த பாப்டிஸ்ட் திருச்சபை

## REFORMED BAPTIST CHURCH

*No:295, Shanthi nagar, Yercaud main road, Salem-636008*

***Mobile No & Whatapp No: +91 98427 67184***

***Website:***

**www.tamilchristianmessages.com**

**www.reformedbaptistchurch.in**


* *நீங்கள் இதைப்போன்ற மற்ற ஆவிக்குரிய புத்தகங்கள் மற்றும் கிருபை சத்திய தினதியான புத்தககங்களைப் பெறவிரும்பினால், அல்லது உங்களுக்கு அறிமுகமான நண்பர்களுக்கு புத்தககங்கள் அனுப்ப வேண்டுமெனில், அனுப்ப வேண்டிய முகவரியை மேற்கண்ட கைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி "SMS" அனுப்பவும். அல்லது மேற்கண்ட முகவரிக்கு கடிதம் எழுதவும். நாங்கள் உங்களுக்கு இலவசமாக புத்தகங்களை அனுப்பி வைக்கிறோம்.*

உங்களுக்கு ஆவிக்குரிய குழப்பங்கள், கேள்விகள் இருப்பின் மேற்கண்ட கைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு, பகிர்ந்துகொள்ளலாம். அல்லது மேற்கண்ட முகவரிக்கு கடிதம் மூலம் பகிர்ந்துகொள்ளலாம்.

*"நீ மறுபடியும் பிறந்திருக்கிறாயா?"- இந்த செய்தியை நீங்கள் இணையதள வழியாகவும் கேட்கலாம்.*

*http://tamilchristianmessages.com/are-you-born-again/*


**சீர்திருத்த சத்தியங்கள்**

**# சீர்திருத்த பாப்டிஸ்ட் வெளியீடு**

## நீ மறுபடியும் பிறந்திருக்கிறாயா?

யோவான் எழுதின சுவிசேஷம் மூன்றாவது அதிகாரத்தை மையமாகக்கொண்டு மறுபிறப்பு என்றால் என்ன? என்பதைப் பற்றியும், ஒருவன் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானா? இல்லையா? என்பதைக் குறித்தும் இந்த சிற்றேட்டில் பார்ப்போம். இந்த செய்தியின் அடிப்படையில், நீங்கள் மறுபடியும் பிறந்தவர்களா? நீங்கள் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கக் கூடிய நிலையில் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? என்று உங்களை நீங்களே சோதித்தறிந்து கொள்ளலாம். நிக்கொதேமு என்ற தேவமனிதன் அல்லது பெரிய போதகன் இயேசுவினிடத்தில் வந்து ஒரு காரியத்தை சொல்லுவதை நாம் பார்க்கிறோம். "அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான்" (யோவான் 3:2). ஒருவேளை அவன் இவ்விதமாக சொல்லும்பொழுது இயேசுவானவர் மகிழ்ந்து தன்னை மெச்சிக்கொள்ளுவார் என்று நினைத்திருக்கலாம். ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அவனுடைய ஆழமான ஆத்தும நிலையை ஊடுருவிப் பார்த்து ஒரு காரியத்தை சொன்னார். "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (யோவான் 3:3).

### ஒரு மனிதன் ஏன் மறுபடியும் பிறக்க வேண்டும்?

இங்கு நான்கு முக்கிய காரியங்களைப் பார்க்கலாம்.

### 1. மரணத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளும்படிக்கு:

நம்முடைய வாழ்க்கையில் நாம் இருக்கிற நிலையில் (எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி) மரித்தால், நரகத்திற்குத்தான் போவோம் என்று வேதம் தெளிவாக சொல்லுகிறது. "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" (ரோமர் 5:12). ஆகவே இந்த உலகத்தில் ஒரு மனிதன் எந்த தேசத்தில், எந்த இடத்தில் பிறந்திருந்தாலும் அவனுக்கு மரண ஆக்கினை உண்டு. ஒரு மனிதன் பிறக்கும்பொழுதே நரகத்திற்கு நியமிக்கப்பட்ட நபராக, நித்திய தண்டனையை பெற்றவனாகப்

*பிறக்கிறான். இதையே தான் இயேசு கிறிஸ்துவும் தெளிவாக சொல்லுகிறதைப் பார்க்கிறோம். "தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று" (யோவான் 3:18). எனவேதான் நீயும் நானும் பிறக்கும்பொழுதே ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டவர்களாகப் பிறக்கிறோம். நாம் இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெறவில்லையென்றால் நிச்சயமாக நாம் நரகத்திற்கு நியமிக்கப்பட்டவர்கள்.*

### 2. ஆவிக்குரிய காரியங்களை அறிந்து கொள்ளும்படிக்கு:

*"ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" (1 கொரி 2:14). ஜென்ம சுபாவமுடன் பிறந்தவன் ஆண்டவருடைய காரியங்களை அறிந்துகொள்ளும்படியாக இருப்பதில்லை. தேவனை அறிந்து, அவரை விசுவாசிக்கவில்லை என்றால் அவன் நரகத்திற்கு பாத்திரவான்.*

### 3. இருதயம் புதுப்பிக்கப்படும்படிக்கு:

*இந்த ஜென்ம சுபாவத்தோடு பிறக்கக்கூடிய மனிதனின் இருதயம் திருக்கும் மகாகேடு நிறைந்ததுமாகக் காணப்படுகிறது. அவ்விதமான இருதயம் பாவத்தின் ஊற்றாகக் காணப்படுகிறது(மத்தேயு 7:21-22). இந்தக் கேடான இருதயம் புதுப்பிக்கும்படியாக ஒரு மனிதன் மறுபடியும் பிறக்கவேண்டும். இல்லையேல் நரகத்தின் வாசல் அவனுக்கு திறந்தே இருக்கிறது.*

### 4. கோபாக்கினையிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படியாக:

*"சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்" (எபே 2:3). இந்த கோபாக்கினை என்பது மனிதனாக பிறக்கிற ஒவ்வொருவருக்கும் நியமிக்கப்பட்டது. அவன் மறுபடியும் பிறக்கவில்லை என்றால் தேவனுடைய கோபாக்கினையை நரகத்தில் சுமந்தே தீரவேண்டும்.*

*ஆகவே நீ மறுபடியும் பிறவாமல் போனால் உன்னுடைய நித்திய வாழ்க்கை நரகத்தில் தான் என்பது நிச்சயக்கப்பட்ட ஒன்று. நீ இயேசுவை நம்புகிறேன், விசுவாசிக்கிறேன், நேசிக்கிறேன், ஜெபிக்கிறேன் என்று சொல்லலாம். ஆனால் நீ மறுபடியும் பிறக்கவில்லை என்றால் உன்னுடைய பக்தி என்பது பரிசேயத்தனமே.*

## மறுபிறப்பு என்றால் என்ன?

*இதனை இரண்டு விதமான தலைப்புகளில் பார்க்கலாம்.*

### 1. தேவ ஆவியினால் பிறப்பது:

*"மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்" (யோவான் 3:6).*

*இது முற்றிலும் ஒரு வித்தியாசமான காரியம். நீயும் நானும் மாம்சத்தினால் பிறந்திருக்கிறோம். இயேசுவானவர் நிக்கொதேமுவைப் பார்த்து நீ ஆவியினால் பிறக்கவேண்டும் என்கிறார். ஆனால் நிக்கொதேமு அதனை விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஆகவேதான், "ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான்" (யோவான் 3:4). ஒரு மனிதனுடைய பிறப்பு கூட மிகவும் ஆச்சரியப்படத்தக்கது. எப்படியெனில், ஒரு குழந்தை கர்ப்பம் தரிக்கிற வேளையில் ஏறக்குறைய முப்பது கோடி முதல் ஐம்பது கோடி உயிரணுக்கள் தாயினுடைய கர்ப்பப்பைக்குள் செல்லுகிறது. ஆனால் அந்த தாயினுடைய கர்ப்பபையில் இருந்து மாதம் ஒருமுறை, ஒரு கரு முட்டை வெளிவரும். அந்த கோடிக்கணக்கான உயிரணுக்களிலிருந்து ஒரேஒரு உயிரணு மட்டும் அந்த கருமுட்டையுடன் இணைகிறது தான் கர்ப்பம் தரித்தல். நமக்கு அது தெரியாது. ஆனால் தேவன் அதை நேர்த்தியாக உருவாக்கியுள்ளார். அருமையானவர்களே! இதைவிட ஆச்சாரியமான ஒன்றுதான் ஆவியில் பிறத்தல். தேவ ஆவியானவர் ஒரு மனிதனுடைய இருதயத்தில் இவ்விதமான ஒரு பிறப்பித்தலை நடப்பிப்பதே மறுபடியும் பிறத்தல். பரிசுத்த ஆவியானவர் மனிதனுடைய இருதயத்தில், அவனுடைய உள்ளத்தில் செயல்பட்டு அங்கு புதிய குழந்தையாக, ஒரு புது சிருஷ்டியாக பிறப்பதுதான் மறுபிறப்பு. அதைத்தான் வேதம், புது சிருஷ்டி (New Creation) என்று சொல்லுகிறது. இந்த ஒரு செயல் மனிதனில் நடைபெறவில்லை என்றால் அவன் மறுபடியும் பிறந்தவனல்ல அல்லது இரட்சிக்கப்பட்டவனல்ல.*

*தேவ ஆவியானவர் ஒரு மனிதனில் செயல்பட்டு அவன் மறுபடியும் பிறக்கும்பொழுது, புதிய ஜீவனைக் கொண்டவனாக, புதிய சுபாவத்தைக் கொண்டவானாக புதிய சிருஷ்டியாகக் காணப்படுகிறான். ஆகவேதான் வேதம் சொல்லுகிறது,*

*"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்" (யோவான் 1:12-13).* அவர்கள் தேவனுடைய குடும்பத்தில் தேவனுடைய பிள்ளைகளாக பிறந்தவர்கள். *"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (2 கொரி 5:17).* ஆகவேதான் இயேசுவானவர் சொன்னார், *"நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம்" (யோவான் 3:7).* மறுபிறப்பைக் குறித்து அதிசயப்படவேண்டாம்.

**2. புது சிருஷ்டி:**

மறுபிறப்பு என்பது புது சிருஷ்டி. தேவனுக்குப்பிறந்த தேவனுடைய பிள்ளையாய் இந்த உலகத்தில் பிறப்பது. ஒரு சிங்கத்துக்கு ஒரு கழுதை பிறக்காது. ஒரு சிங்கத்துக்கு குரங்கு பிறக்காது. ஒரு சிங்கத்துக்கு ஒரு சிங்கக்குட்டி தான் பிறக்கும். அதுபோல தேவனால் பிறப்பிக்கப்பட்ட ஜனங்கள் தேவனுடைய சாயலை பெற்றிருக்கிற ஜனங்கள். அவர்கள் தேவ ஆவியினால் பிறப்பிக்கப்பட்டவர்கள். அவர்கள் யார்? வேதம் சொல்லுகிறது, பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின. ஒரு புதிய வாழ்க்கை முறையை கொண்டிருப்பவர்கள். புதிய ஒரு நோக்கம், திட்டம், செயலினை கொண்டிருப்பவர்கள். இவர்கள் தான் மறுபடியும் பிறப்பிக்கப்பட்ட நபர்கள். இவர்கள் யார் என்பதை இன்னும் சிறிது விளக்கப்படுத்தி சொல்லுகிறேன். மறுபிறப்பு அடைந்தவர்கள் யார் என்று சொன்னால், *"இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு..." (2 பேதுரு 1:4).* அவர்களுடைய ஆத்துமாவில் தெய்வீக வித்தானது இடப்படுகிறது. அவர்களுக்குள் திவ்விய சுபாவத்திற்குரிய தன்மைகள் வித்திடப்படுகிறது. மேலுமாக, *"என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே*

*உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 5:24). இரண்டு காரியம் இங்கு சொல்லப்படுகிறது, அவனுக்கு நித்திய ஜீவன் கொடுக்கப்படுகிறது. அவன் அதற்கு முன்பாக மரண ஆக்கினை அடைந்தவனாக இருந்தான். அடுத்ததாக அவன் மரணத்தைவிட்டு நீங்கி அவன் ஜீவனுக்குட்பட்டிருக்கிறான். "தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" (1யோவான் 5:11-12). இயேசு கிறிஸ்துவின் சாயலைக் கொண்டவனே மறுபடியும் பிறந்தவன். இதுதான் மறுபடியும் பிறந்த நபரில் நடப்பிக்கும் படியான தேவ ஆவியானவருடைய செயல்.*

## <u>மோட்ச வாசியா?</u> <u>நரக வாசியா?</u>

*நீ மரித்தப்பின்பு எங்கே செல்லப்போகிறாய்? இந்த கேள்விக்கான பதிலை இன்று நாம் தெரிந்துகொள்ளுவது அதிமுக்கியமான ஒன்று. ஏனென்றால் இனிவரப்போகிற வாழ்க்கை நித்தியமானது. அது பரலோகமாக இருக்கும் அல்லது நரகமாக இருக்கும். இந்தக் கேள்விக்கான பதிலை நாம் 1 யோவான் புத்தகத்திலிருந்து பார்க்கப்போகிறோம்.*

*இந்த 1 யோவான் புத்தகத்திலிருந்து 12 காரியங்களை நான் உங்கள் முன் வைக்கிறேன். இந்த பன்னிரண்டு காரியங்களும் உங்களில் காணப்படுகிறதா இல்லையா என்பதை சோதித்துப்பாருங்கள். ஒவ்வொரு காரியமாக சொல்லும்பொழுதும் உங்களில் காணப்படுகிறது என்றால் டிக் (✓) போட்டுக்கொள்ளுங்கள். இல்லையென்றால் இன்ட் (✕) போட்டுக்கொள்ளுங்கள். இது கர்த்தருடைய வார்த்தை. நான் உங்களை நியாயந்தீர்க்கவில்லை. உன் வாழ்க்கையில் காலங்களை எல்லாம் வீணடித்துவிட்டாய். ஆனால் இன்றைக்கு இந்த பிரதியின் மூலம் கர்த்தர் உன்னோடு பேசுகிறார். இந்த காரியங்கள் உங்களில் இருக்கிறது என்றால் நீங்கள் பரலோகத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறீர்கள். இவைகள் உங்களில் காணவில்லை என்றால் நீங்கள் நரகத்தை நோக்கிப் பயணிக்கிறீர்கள் என்று அர்த்தம். உங்கள் ஆத்துமாவின் நிலை என்ன என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.*

## 1. உன் ஐக்கியம் யாரோடு இருக்கிறது?

*"நீங்களும் எங்களோடே ஐக்கிய முள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" (1யோவான் 1:3).*

*முதலாவது காரியமாக உன்னுடைய ஐக்கியம் கிறிஸ்துவோடும், அவரால் மீட்கப்பட்ட ஜனங்களோடும் இருக்கிறதா? நீ கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்ட ஒரு நபரா? அவரால் மீட்கப்பட்ட மக்களோடு கூட உன்னை உட்படுத்திக் கொண்ட வாழ்க்கை உன்னில் காணப்படுகிறதா? மேலும் யோவான் சொல்லுகிறார், "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்;" (1யோவான் 1:7). நீ ஆண்டவருடைய பிள்ளையாக மறுபடியும் பிறந்திருப்பாயானால், தேவனுடைய குமாரனோடும், அவரால் கழுவப்பட்ட மக்களோடும் உன் வாழ்க்கையைக் கொண்டிருப்பாய். உன்னுடைய உறவு யாரோடு இருக்கிறது? இது உங்களில் காணப்படுகிறது என்றால் டிக் (✓) போட்டுக்கொள்ளுங்கள். இல்லையென்றால் இன்ட் (✕) போட்டுக்கொள்ளுங்கள்.*

## 2. சத்தியத்தின்படி உன் வாழ்க்கை காணப்படுகிறதா?

*"நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லு கிறவர்களாயிருப்போம்" (1யோவான் 1:6).*

*இரண்டாவது காரியமாக உன்னுடைய வாழ்க்கையானது வெளிச்சத்தின் பிள்ளைகளாக, கிறிஸ்துவின் பிள்ளைகளாக, வெளியரங்கமாய் அவருடைய வார்த்தையின் படி வாழக்கூடிய வாழ்க்கை உன்னில் காணப்படுகிறதா? உனக்கு அவரோடு ஐக்கியம் இருக்கிறது என்று சொல்லுகிறாய், அப்படியானால் அவருடைய சத்தியத்தின்படி நடக்கிறாயா? இல்லையென்றால் நாம் பொய் சொல்லுகிறவர்களாகக் காணப்படுவோம். நீ மறுபடியும் பிறந்திருப்பாயானால், கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற சத்தியத்தின் வெளிச்சத்தில் நடக்க உன் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்திருந்தால், அதன்படி நடக்கும்படியான வாழ்க்கை உன்னில் காணப்பட்டால், நீ மறுபடியும் பிறந்த நபர். இது உங்களில் காணப்படுகிறது என்றால் டிக் (✓) போட்டுக்கொள்ளுங்கள். இல்லையென்றால் இன்ட் (✕) போட்டுக்கொள்ளுங்கள்.*

### 3. உன் பாவத்தைக் குறித்து பரிசுத்த ஆவியானவரின் உணர்த்துதல் இருக்கிறதா?

*"நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது" (1யோவான் 1:8).*

*நாம் ஒரு இடத்திற்கு குடியேறப் போவோமென்றால், அங்கு சரியான வசதிகள் இருக்கிறதா? தண்ணீர் வசதி, கழிவறைகள், மின்சாரம் மற்றும் பல வசதிகள் இருக்கிறதா என்று நாம் சோதித்துப் பார்ப்போம் தானே. அது போல நம்முடைய சரீரமே தேவனுடைய ஆலயம். நம் இருதயத்தில் தேவ ஆவியானவர் வாசம் பண்ணுகிறவராக இருக்கிறார். அவர் நம்மில் வாசம் பண்ணுவாரானால் அதற்குரிய இடமாக அவர் மாற்றாமல் அதில் வாசம் பண்ணமாட்டார். அதுதான் மறுபடியும் பிறத்தல். பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசம் பண்ணும்பொழுது புதிய பிறப்பித்தலை செயல்படுத்துகிறார். ஆகவேதான் அவன் புதிய மனிதனாக காணப்படுகிறான். அவ்வாறு இருக்கிற வேளையில் நீ பாவம் செய்யும் பொழுது, பரிசுத்த ஆவியானவர் உன்னோடு கூட இருப்பதினால் உன்னிடத்தில் பேசுவார். இது தவறு. தவறாக நீ பேசுகிற வார்த்தை, தவறாக எழும்புகிற சிந்தனை, தவறாக உன் வாழ்க்கையில் நடந்துகொள்ளும் நடத்தை உன்னில் காணப்படும்பொழுது ஆவியானவர் உன்னோடு கூட பேசுகிறார்: "மகனே, மகளே இது தவறு". ஆவியானவர் பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்தும் பொழுது, நீ மறுபடியும் பிறந்திருந்தால், அப்பொழுது உன்னில் காணப்படுகிற செயல் "ஆண்டவரே என்னை மன்னியும்" என்ற மனந்திரும்புகிற நிலையானது உன்னில் காணப்படும். மனந்திரும்புவது என்பது ஒரு சாதாரணமான காரியமல்ல. நீ பாவம் செய்யும் பொழுது பரிசுத்த ஆவியானவர் ஆழமான கலக்கத்தை, துக்கத்தை உனக்குள் ஏற்படுத்துகிறார். ஆகவேதான் பவுல் மனதிரும்புவதற்கேதுவான துக்கம் என்று சித்தரிக்கிறார்(2 கொரி 7:9-10). அப்பொழுது நீ என்ன செய்வாய், உன்னை நீ தாழ்த்துவாய். ஆண்டவரே என்னை மன்னியும். நான் உமக்கு விரோதமாக பாவம் செய்தேன் என்று கதறுவாய். ஒருவேளை நீ வேறொரு நபரை துக்கப்படுத்தியிருந்தால், அவர்களிடத்தில் சென்று மன்னியும் என்று கேட்பாய். மெய்யான*

தாழ்மை அங்கு நிகழும். அப்பொழுது பெருமை உடைபடும். பெருமை பாவத்தின் ஊற்று. எந்தவொரு பாவத்திற்கும் ஊற்று பெருமையே. பரிசுத்த ஆவியானவர் உன்னில் வாசம் செய்யும் பொழுது பாவத்தை மறைத்து, ஒளித்துக் கொண்டிருக்கமாட்டாய். உடனடியாக தாழ்த்தி மனந்திரும்புவாய். இதுதான் மூன்றாவது காரியம். இது உங்களில் காணப்படுகிறது என்றால், 'டிக்' (✓) போட்டுக்கொள்ளுங்கள். இல்லையென்றால் 'இன்ட்' (✕) போட்டுக்கொள்ளுங்கள்.

### 4. அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறாயா?

"அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம். அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை" (1யோவான் 2:3-4).

நான்காவது காரியமாக, ஆண்டவரை எனக்குத் தெரியும் என்று சொல்லுகிறாய், ஆனால் அவருடைய கற்பனைகளை நீ கைக்கொள்ளவில்லை என்றால் நீ பொய்யன். உன்னுடைய எண்ணங்கள், தீர்மானங்கள் எல்லாம் அவருடைய சித்தத்தின்படி, வார்த்தையின்படி காணப்படுகிறாதா? நான் இதை செய்வதா அல்லது வேண்டாமா என்பது தேவனுடைய வார்த்தையின்படி உன் காரியங்கள் காணப்படுகிறதா? அவ்வாறு ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்க்கை உன்னில் காணப்படுகிறதா? அப்படியானால், போடுங்க 'டிக்' (✓) இல்லையென்றால் போடுங்க 'இன்ட்' (✕).

### 5. உன் வாழ்க்கை எதன்பேரில் இருக்கிறது?

"உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்" (1யோவான் 2:15-16).

அநேக சமயங்களில் நீ என்ன செய்கிறாய், உலக கவலை அல்லது ஐஸ்வரியத்தின் மயக்கத்தில் கிடக்கிறாய். எதுவுமே

*இல்லையென்றால் ஒரே கவலை. கொஞ்சம் அதிகமாய் பணம் வந்துவிட்டால், நான் என்ன செய்வது, எப்படி வாழுவது, எப்படி சேமிப்பது, ஆறுநாள் போதாது, ஏழாம் நாளும் வேணும் அல்லது ஏழு நாளுமே போதாது என்ற ஐஸ்வரியத்தின் மயக்கம். அன்பானவர்களே! இது சரி அல்ல. பழைய ஏற்பாட்டில் தேவன் கொடுத்தக் கட்டளை, ஓய்வு நாளைக் கனப்படுத்தாதவனைக் கல்லெறிந்து கொல்லவேண்டும். கர்த்தர் தம் வார்த்தையில் ஒரே தீர்மானமாகத்தான் எப்பொழுதும் இருக்கிறார். அவர் நியாயாதிபதி. உன் ஆசை எதைப் பற்றிக்கொண்டுள்ளது? உலகத்தின் காரியங்களிலும், ஐஸ்வரியத்தின் பேரிலுமா? அல்லது தேவனுடைய காரியங்களிலும், அவருடைய சித்தத்தின்படி செய்ய வாஞ்சையுள்ள நபரா? தேவன் பேரில் தான் வாஞ்சையென்றால், போடுங்க டிக் (✓), இல்லையென்றால் போடுங்க இன்ட் (✕).*

### 6. கர்த்தருடைய நீதியை மட்டுமே சார்ந்து வாழுகிற நபரா?

*“அவர் நீதியுள்ளவராயிருக்கிறாரென்று உங்களுக்குத் தெரிந்திருப்பதினால், நீதியைச் செய்கிறவனெவனும் அவரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள்” (1யோவான் 2:29).*

*கர்த்தருடைய நீதிக்குரிய காரியங்களைச் செய்கிறாயா? இந்த உலகத்தில் நான் ஒரு பாவி. நான் ஆக்கினைக்கு உட்படுத்தப்பட்ட மனிதன், ஆனால் எனக்காக சிலுவையில் தன்னையே ஒப்புக்கொடுத்து, எனக்காக நீதியை சம்பாதித்த அவரையே நான் சார்ந்துக்கொள்ளுவேன் என்ற செயல் உன்னில் இருக்கிறதா? உன்னுடைய சுயநீதியை வெறுத்து இரட்சிப்பின் சால்வையை நான் அணிந்துகொள்ளுவேன் என்ற தீர்மானம் உன்னில் காணப்படுகிறதா? என் நீதி ஒன்றுக்கும் உதவாத குப்பை, நான் சிலுவையில் அறையப்பட்ட அவரையே, அவருடைய நீதியையே சார்ந்து வாழுவேன் என்ற வாழ்க்கை உன்னில் காணப்படுகிறதா? அப்படியானால், போடுங்க டிக் (✓), இல்லையென்றால் போடுங்க இன்ட் (✕).*

### 7. பரிசுத்தமான வாழ்க்கை உன்னில் காணப்படுகிறதா?

*“அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்” (1 யோவான் 3:3).*

*ஆங்கிலத்தில் இதனை Maintaining a pure life என்று சொல்லலாம். பரிசுத்தமான ஒரு வாழ்க்கையை வாழும்படியாக, அவனுடைய வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து வாழக்கூடிய காரியம். இது சாத்தியக்கூறாகுமா? அன்பானவர்களே! இது உன்னுடைய என்னுடைய மாம்ச பிரகாரமான பெலத்தினால் முடியாது. ஆனால் நீ மறுபடியும் பிறந்திருப்பாயானால் உனக்குள் இருக்கிற பரிசுத்த ஆவியானவர் உனக்கு அந்த உன்னத பெலத்தைக் கொடுக்கிறார். நீ பரிசுத்தமான ஒரு வாழ்க்கையை வாழ, உனக்குள் ஒரு ஜாக்கிரதையும், விழிப்பும் கொண்ட நிலையில் நீ வாழக்கூடிய காரியத்தைத் தெரிந்து கொள்ளுகிறாய். அந்த ஒரு மனநிலையோடு உன் வாழ்க்கை காணப்படுகிறதா? அப்படியானால், போடுங்க 'டிக்' (✓), இல்லையென்றால் போடுங்க 'இன்ட்' (✕).*

**8. உன்னுடைய வாழ்க்கையில் நீ பரிசுத்தத்தில் முன்னேறிச் செல்கிறாயா?**

*"அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை. அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை" (1யோவான் 3:5-6)*

*முன்னொரு காலத்தில் இந்தப் பாவங்கள் எல்லாம் என்னை வெகு சீக்கிரத்தில் வீழ்த்திற்று, ஆனால் இப்பொழுது ஆண்டவருடைய கிருபையினால் அவைகளை மேற்கொண்டுள்ளேன். அவைகள் முன்போலவே என்னைப் பாதிக்கக்கூடிய நிலையில் நான் இப்பொழுது இல்லை. இப்பொழுது எல்லாவிதமான காரியத்திலும் நான் மெய்யான பரிசுத்த அளவுகளில் முன்னேறி செல்லுகிறேன் என்ற நிலை உன்னில் காணப்படுகிறதா? முன்னொரு காலத்தில் பாவத்தை விரும்பி துணிகரமாய் செய்தாய், இப்பொழுதோ இது தேவனைத் துக்கப்படுத்தும். இது தேவனுக்குப் பிரியமில்லாத காரியம் என்ற மனநிலையில் பரிசுத்தத்தில் முன்னேறி செல்லுகிற வாழ்க்கை உன்னில் காணப்படுகிறாதா? அவ்வாறு உன்னில் காணப்பட்டால், போடுங்க 'டிக்' (✓), இல்லையென்றால் போடுங்க 'இன்ட்' (✕).*

**9. மற்றவர்களின் பேரிலே மெய்யான அன்பு உனக்கிருக்கிறதா?**

*"நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான்" (1யோவான் 3:14)*

*ஆண்டவருடைய பிரதான குணமே அன்புதான். ஆகவேதான் தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று நாம் பார்க்கிறோம். ஒரு சகோதரன் என்னை நேசிக்கவில்லை என்றாலும் நான் அவரை நேசிப்பேன் என்ற குணம் உன்னில் காணப்படுகிறதா? ஒருவேளை கிறிஸ்து அவ்விதமாய் நம்மை நேசிக்காமல் இருந்திருப்பாரானால், அவர் இந்த உலகத்தில் வரவேண்டிய அவசியம் இல்லையே. நாம் பாவிகளாய் இருக்கையில் நமக்காக மரித்ததினால், அவருடைய அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். ஆகவே நாம் மறுபடியும் பிறந்திருந்தால்தான் இந்த தெய்வீக அன்பு நம்மில் காணப்படும். இல்லையென்றால் வெறுப்பு, கசப்பு, சண்டை, பொறாமை, பெருமை தான் இருக்கும். ஆகவே அந்த அன்பு உன்னில் இருக்குமானால், போடுங்க 'டிக்' (✓), இல்லையென்றால் போடுங்க 'இன்ட்' (✕).*

### 10. நீ சத்தியத்திற்கு உரிய நபரென்று, உன் நடக்கையில் காணப்படுகிறதா?

*"என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம். இதினாலே நாம் நம்மைச் சத்தியத்திற்குரியவர்களென்று அறிந்து, நம்முடைய இருதயத்தை அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்" (1யோவான் 3:18-19)*

*நீ மறுபடியும் பிறந்த நபரென்றால் சத்தியத்தில் நடக்கிற நடக்கை உன் வாழ்க்கையில் காணப்படும். நாம் எல்லோரும் பூரண பரிசுத்தர்கள் அல்ல. தவறுகிற நபர்கள்தான். ஆனால் எப்பொழுதும் தவறிலேயே நிலைத்திருக்க மாட்டோம். மனந்திரும்புவோம். வெறும் வாய்ப்பேச்சினால் அல்ல, உன் நடக்கையில் உன் செயலில் சத்தியம் காணப்படுகிறதா? அப்படியானால், போடுங்க 'டிக்' (✓), இல்லையென்றால் போடுங்க 'இன்ட்' (✕).*

### 11. தூய மனசாட்சி உன்னில் காணப்படுகிறதா?

*"பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து" (1யோவான் 3:21).*

*நீ பாவம் செய்யும் பொழுது ஆவியானவர் உன்னோடு கூடப் பேசுகிறார். நீ செய்தது தவறு என்று சுட்டிக்காட்டுகிறார். ஆனால் நீ என்ன செய்கிறாய், சிறிது நேரம் அதைக் குறித்து யோசிக்கிறாய், பிறகு அதனை மறந்துவிடுகிறாய், அதனைப் பற்றிய உணர்வே இல்லாமல் போய்விடுகிறது. ஆனால் மறுபடியும்*

*பிறந்திருப்பாயானால் அதைச் சரி செய்து, தூய மனசாட்சியுடன் நீ வாழுவாய். இந்த காரியம் உன்னில் இருந்தால் போடுங்க டிக் (✓), இல்லை யென்றால் போடுங்க இன்ட் (✕).*

## 12. நீ தேவனால் மறுபடியும் பிறந்த நபரா?

*"தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1 யோவான் 5:4)*

*அருமையானவர்களே தேவனாலே பிறந்தவர்கள் எல்லாரும் உலகத்தை ஜெயிப்பார்கள். நீ பாவத்தின் ஆளுகையிலிருந்து விடுபட்ட ஒரு நபராக வாழுவாய். ஜென்ம சுபாவத்தில் இருந்து மீண்ட நபராக இருப்பாய். தேவனே உனக்கு எல்லாமும், எல்லாமுமாக இருப்பார். அப்படியானால், போடுங்க டிக் (✓), இல்லையென்றால் போடுங்க இன்ட் (✕).*

*அன்பாவனர்களே நான் கூறியது கொஞ்சம்தான். இந்த பன்னிரண்டு காரியங்களில் நீ எத்தனை காரியங்களில் முழு மனதுடன் டிக் (✓) செய்திருக்கிறாய்? உன்னுடைய நித்தியமான வாழ்க்கை எங்கே? நீ மறுபடியும் பிறக்கவில்லை என்றால் பரலோகத்தைக் கிட்டச்சேர முடியாது என்று இயேசு சொல்லுகிறாரே. "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 3:3). நிக்கொதேமு இதைக் கேட்டவுடனே பிரம்பித்துப்போனான், புரியாத புதிராக அதிசயப்பட்டான். ஆகவேதான் சொன்னார், "நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம்" (யோவான் 3:7). ஒருவேளை இதை வாசிக்கிற நீங்கள் அதைக் குறித்து அதிசயப்படவேண்டாம். நான் ஒரு நல்ல கிறிஸ்தவன், நான் தேவனுடைய பிள்ளை ஆனால் இது என்ன வித்தியாசமான போதனையாக இருக்கிறதே! என்று நீங்கள் அதிசயப்படவேண்டாம். மனந்திரும்புவோம், "கர்த்தாவே நான் மறுபடியும் பிறக்கவேண்டும், என்னை உம்முடைய ஆவியினால் பிறப்பித்தருளும்" என்று மன்றாடுவோமாக. அப்பொழுது இந்த உலகத்தில் தேவனுடைய சாயலை தரித்த நபராக, பரலோகத்தில் வாசம்பண்ண பாத்திரமுள்ள நபராக இருப்போம். இன்றைக்கு தேவன் தெளிவாக உன்னோடுகூட, உன் ஆத்துமாவோடு கூட பேசியிருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். நீ என்ன செய்யப்*


போகிறாய்? அநேகர் நான் கடைசி நாளில் மனந்திரும்புவேன் என்று சொல்லி தங்களின் வாழ்க்கையின் காலங்களை வீணடித்து, கடைசியில் நரகத்தை கிட்டிச்சேருகிறார்கள். மூடி என்கிற தேவ மனிதன் ஒரு இடத்தில் பிரசங்கம் செய்தபோது, அதைக் கேட்ட ஒருநபர் அவரிடம் வந்து, "ஐயா இந்த நாளின் செய்தி என்னை மிகவும் பாதித்தது. என்னுடைய இருதயம் குத்தப்பட்டது. நான் ஒரு சிறிய காரியமாக பக்கத்தில் இருக்கிற பட்டணத்துக்குப் போகிறேன், வந்தவுடன் நான் கிறிஸ்துவுக்கே என்னை முழுமையாக ஒப்புக்கொடுக்கிறேன் என்றார்". அதற்கு மூடி "சகோதரனே இப்பொழுதே அநுக்கிரக காலம், இன்றே இரட்சணிய நாள் என்று வேதம் சொல்லுகிறது. நாளைக்கு இல்லை சகோதரே, இப்பொழுதே நீ மனந்திரும்பு" என்றார். அதற்கு அவர் "இல்லை, ஐயா நான் அந்த பட்டணத்திற்கு போயிட்டு வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு போனார். நாட்கள் சென்றது. பிறகு மூடிக்கு ஒரு தகவல் வந்தது, "நீங்கள் நேசித்த நபர் மரணத்தருவாயில் இருக்கிறார்" என்று. உடனே மூடி ஆதாங்கத்தோடு "இப்பொழுதாவது அந்த மனிதனைக் கர்த்தருக்குள் வழிநடத்தமுடியுமா?" என்று சொல்லி ஓடினார். அவர் அருகில் சென்று "நண்பனே நான் மூடி வந்திருக்கிறேன், நண்பனே நான் மூடி வந்திருக்கிறேன்" என்றார். அந்த மனிதனின் வாயிலிருந்து மெல்லிய குரலில், "நேரம் கடந்துவிட்டது, நேரம் கடந்துவிட்டது (Its Too late, its too late)" என்ற வார்த்தையே வந்தது. அருமையான சகோதரனே! சகோதரியே! இவ்வளவு நாள் உன் வாழ்க்கை எப்படியிருந்தது என்று எனக்கு தெரியாது. ஆனால் இந்த செய்தி உன்னை மனந்திரும்பபடியாக வழிநடத்தும், இல்லையென்றால் உன் இருதயம் இன்னுமாக கடினப்பட்டு, பொய் சமாதானத்திற்கு இழுத்துச் செல்லும். சிலுவையைத் தவிர வேறொரு வழியில்லை. இயேசு ஆத்தும தாகத்தோடு, "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் என்னிடத்திற்கு வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதலைத் தருவேன்" என்று சொல்லுகிறார். இந்த அழைப்பை நீ அல்லத்தட்டுவாயானால் நரகம் உனக்கு காத்திருக்கிறது.

**தேவன் தாமே இந்த சத்தியத்தை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!**

# Tamil Daily Devotion

# தின தியானம் 2018

- தின தியானம்
- நூற்றுக்கணக்கான பிரசங்கங்கள்
- இலவச புத்தகங்கள்
- நினைப்பூட்டி
- நேரடி ஒளிபரப்பு
- ரேடியோ 24x7




Available on the App Store

Get it on Google play

**ANDROID**

SCAN THE CODE WITH YOUR MOBILE DEVICE TO DOWNLOAD OR USE THE LINK BELOW IN THE BROWSER

**http://bit.do/dailydev**

**iPHONE & iPAD**

SCAN THE CODE WITH YOUR IPAD OR IPHONE TO DOWNLOAD OR TYPE THE LINK BELOW IN YOUR BROWSER

**http://bit.do/itunesdailydev**

Visit our Website

**www.tamilchristianmessages.com**